Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 04 | 19 - 07 - 1992 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 152

## மருந்தேற்றும் ஊசிகளால் எயிட்ஸ் பரவும் அபாயம்

அரச தனியார் வைத்தியசாலைகளில் மருந்தேற்றுவதற்குப் பாவிக்கப்படும் ஊசிகள் மற்றும் ஸ்ரிஞ்சுகள் என்பவை தகுந்த முறையில் தொற்று நீக்கம் செய்யப்படாவிடில் எயிட்ஸ் போன்ற பயங்கர நோய்கள் பரவுவதற்கு ஏதுவாகிவிடும் என்று டாக்டர்கள் எச்சரித்துள்ளனர். இதுபற்றி கொழும்பு பத்திரிகையொன்று தகவல் வெளியிடுகையில் மேலும் தொற்று நீக்குவதற்கு தற்போது கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள் போதுமானவையல்ல என்றும், இதனால் எதிர்காலத்தில் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவித்துள்ளது. கொழும்பு மருத்துவ கல்லூரி வளாகத்தில் இதுபற்றி விசேட ஆய்வொன்றை நடத்திய டாக்டர் ஜெயசிங்கா கூறுகையில் நாளாந்தம் (4 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியிலும் கிழக்கிலும் ராணுவம் பதற்றம்

# புலிகள் திடீரென தாக்கலாமென அச்சம்

## ராணுவ நிலைகளை பலப்படுத்த அரச உயர்மட்டம் உத்தரவு

(நமது நிருபர்)

வன்னிப் பிரதேசத்திலும், கிழக்கு மாகாணத்திலும் விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் எனச் சிறிலங்கா இராணுவத்தின் உயர் பீடம் அச்சம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து முகாம்களையும், காவலரண்களையும் பலப்படுத்துமாறு சிறிலங்கா உயர்பீடம் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அண்மையில் கிழக்கிலும், வன்னியிலும் புலிகள் மேற்கொண்ட இரு துணிகரமான வெற்றிகரமான தாக்குதலினால் இராணுவத்தினருக்கு பெரிய உயிர் சேதமும், தளபாட சேதமும் ஏற்பட்டன. இதேவேளை மேலும் காவலரண்கள் மீதும், மினிமுகாம்கள் மீதும் புலிகள் தாக்கலாம் என்ற அச்சத்தினால் இராணுவத்தரப்பின் பாதுகாப்பு குறித்து புதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை பொலநறுவையிலுள்ள பொலிஸ் மற்றும் இராணுவ நிலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற இரகசியத் தகவல்களைஅடுத்துபாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

அத்தோடு வவுனியா எல்லைப்புற இராணுவ காவல் அரண்களில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எல்லைப்புற இராணுவ முகாம்களில் இராணுவம் மேலதிகமாகக் குவிக்கப்படுகிறது என்று அறியப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் சமீபகாலத் தாக்குதலினால் அதிர்ச்சி அடைந்திருக்கும் இராணுவம் புதிய குடியேற்றத் திட்டப் பகுதிகளிலிருந்து சிங்களக் குடும்பங்கள் வெளியேறாமல் இருப்பதற்காக படையினரின் தொகையை அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது. (தி)

## சோதிடம் பார்த்து இராணுவ நடவடிக்கை?

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் யாழ். குடாநாடு பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுமென சோதிடர்கள் கூறுயுள்ளனர் எனத் தெரிவிக்கும் துண்டு பிரசுரங்கள் யாழ். குடாநாடு முழுவதும் வீசப்பட்டுள்ளதாக கூட்டுப்படை. தலைமையகம் அறி ... தொடர்புண்டா?

கோர்ணல் :- இல்லை. எனினும் இராணுவ அதிகாரிகளுக்கு சோதிடத்தின் மீது தனிப்பட்ட முறையில் நம்பிக்கை இருக்கலாம்.

நிருபர் :- வடபகுதியில் போடப்படும் துண்டுப் பிரசுரங்களைத் தயாரிப்பது யார்?

கோர்ணல் :- கூட்டுப்படைத் ...

## தீவிரவாதிகளிடம் கிராமத்தை மீட்க இந்திய இராணுவம் தாக்குதல்

ஜம்மு-காஷ்மீரில் முஸ்லிம்கள் அதிகமாகவாழும் தோடா என்னும் சிற்றூரை நேற்றுப் பாகிஸ்தானை ஆதரிக்கும் ஹிஸ்புல் முஜாகிதீன் மற்றும் அல்ஜிகாத் குழுவினர் கைப்பற்றிக் கொண்டார்கள்.

அங்கு காவல் அரண்களிலிருந்த இந்தியப் படையினரை இவர்கள் பலமாகத் தாக்கினார்கள் இதனால் பராதுருப்பினர் பின்வாங்கினர்.

பின்னர் தீவிரவாதிகள் உள்ளூர்த்தொலைபேசித் தொடர்பகத்தைச் சேதப்படுத்தினார்கள் தரையிறங்க முயன்ற இந்திய இராணுவ உலங்கு [4 ஆம் பக்கம் பார்க்க]

## இவ்வருட இறுதிக்குள் அரசின் முகமூடி கிழிக்கப்படும்

(கொழும்பு)

தலைமறைவாக வாழ்ந்து வரும் முன்னாள் உதவிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸா உடுகொம்பொல சென்ற புதன்கிழமை வெளிநாட்டு பத்திரிகையாளரைச் சந்தித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரகசியமான இடத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் தான் இந்த வருட இறுதிக்குள் மனைவி பிள்ளைகள் வாழும் நாட்டிற்குச் சென்று அவர்களுடன் இணைந்து கொள்ள

**உடுகம்பொல**

உள்ளதாகவும் அதற்கு முன் [4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கும், அவரது அரசுக்கும் எதிராகத் தாம் மாபெரும் பிரசார இயக்கம் ஒன்றை நடாத்தவுள்ளதாகப் பிரதான எதிர்க்கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் அறிவித்துள்ளன.

முன்னாள் அமைச்சர்களான ...

## நான்குநாள் போரட்டம் சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

... பெற்ற செய்தியாளர்மாநாட் ...

காப்பு பலப்படுத்தப்பட்டுள் காலத் தாக்குதலினால் அதி

## ஆமணக்கெண்ணைக்கும் வவுனியாவில் தடை

வவுனியா இராணுவ சோதனை முகாம் பகுதியூடாக ஆமணக்கெண்ணை கொண்டு வருவது தடைசெய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் நீரிறைக்கும் இயந்திரத்திற்கு ஒயிலுக்குப் பதிலாக இதை உபயோகிக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டே ஆமணக்கெண்ணை தடை செய்யப்பட்டுள்ளது.

இதை மீறிக்கொண்டுசெல்ல முயற்சிப்போர் கைதுசெய்யப்படுகின்றனர். (தி)

டுப்படை தலைமையகம் அறிவித்ததாக செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பான கேள்விகள் பத்திரிகையாளர் மாநாட்டில் கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளரிடம் நிருபர்கள் கேள்விக்கணை தொடுத்தனர்.

நிருபர் :- யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கைக்கும் சோதிடத்துக்கும்

கேர்ணல் :- கூட்டுப்படைத் தலைமையகம்.

நிருபர் :- இந்த வருட இறுதிக்குள் யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படையினரிடம் சிக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

பிரேமதாசா அரசுக்கு எதிரான நான்கு நாள் போராட்டம் நடத்தப் போவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற செய்தியாளர்மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இத்தகவலை வெளியிட்டது.

நூற்றுக்கணக்கான மோட்டார் கார்கள் அடங்கிய கண்டன அணி ஒன்றிற்கு அனுரா பண்டாரநாயக்கா தலைமை தாங்கி அனுராதபுரத்துக்கு வழி நடத்திச் செல்வார் என்று அறிவிக்கப்பட்டது.

கந்தலமாவில் உல்லாசப் பயணிகள் ஹொட்டல் கட்டப்படுவதைச் சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது

முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியும், காமினி திஸாநாயக்காவும் நடத்தும் அரசியல் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் பத்து லட்சம் பேரின் கையொப்பங்களோடு கூடிய கண்டன மனுவொன்றைத் தயாரிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர். ஆகஸ்ட் 28 ஆம் திகதியளவில் இந்த மனுவைத் தாம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்போவதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புபகுதிகளில் ஹெலி, விமானம் நோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பகுதிகளை கடந்த இரு தினங்களாக சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகளும் குண்டு வீச்சு விமானங்களும் பலமுறை சுற்றி நோட்டமிட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

காலவரையறையற்ற ஊரடங்கு அமுலிருக்கும் இந்த வேளையில் சிறிலங்கா விமானப்படையின் இந்நடவடிக்கையினால் மக்கள் பெரிதும் பதற்றம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மேலதிக உணவுக் கப்பல்கள் யாழ். மாவட்டத்திற்கு அனுப்புக

### அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு மேலதிக உணவுக்கப்பல்களை அனுப்பி வைக்கும்படி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய கொழும்பு தலைமை அலுவலகம் அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்துடனும், அத்தியாவசிய சேவைகள் அமைச்சுடனும் மேற்படி இணையத்தின் அதிகாரிகள் தொடர்புகொண்டிருக்கின்றனர்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற இவ் இணையத்தின் விசேடகூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கு மேலதிக கப்பல்களை அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிகிறது. இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவர்கள் இங்குள்ள நிலைமையை விளக்கியதாகவும் கூறப்படுகிறது. அதேவேளை அத்தியாவசிய சேவைகள் அமைச்சு மேலதிக உணவுக் கப்பல்களை யாழ். மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கவேண்டியதன் அவசியத்தை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. (க)

## க. பொ. த. (சா) பரீட்சை ஜூலை 31 விண்ணப்ப முடிவு

(கொழும்பு)

டிசம்பர் மாதம்நடைபெறும் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு இம் மாதம் 31-ம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என தபால் அலுவலகம் மூலம் அறிய முடிகின்றது என்று கொழும்புப் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

30ஆம் திகதிவரையே விண்ணப்பிக்கலாம் என வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தபால் அலுவலகம் அறிவித்துள்ளது.

தற்பொழுது தபால் அலுவலகங்களில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

## ஐ. தே. கட்சி அரசாங்கம் தேர்தலுக்குத் தயாராகிறது?

(கொழும்பு)

சிறிலங்கா அரசு தன்னை ஒரு தேர்தலுக்குத் தயார் செய்து கொண்டிருக்கிறது என பி. பி. சி சிங்கள சேவை நேற்றுத் தெரிவித்தது. ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் வெளியிடப்படவுள்ளதை மனதில்கொண்டு இந்த ஆயத்தங்கள் செய்யப்படுவதாகவும் நீதிமன்றத்தீர்வு எப்படியாக இருந்தபோதிலும் தேர்தலுக்கான ஆயத்தங்களை அது தொடங்கிவிட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னோடியாக ஜனசக்தித் திட்டத்தின் முதற் கட்டத்தைப் பூர்த்தி செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் ஒத்துழைப்புக்கு காவல்துறை நன்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பல வர்த்தக நிலையங்கள் சவக்காரம், தேங்காயெண்ணை என்பவற்றை மக்களுக்கு நியாய விலையில் விற்பனை செய்து வருகின்றன.

தமிழீழ காவல்துறையினர் பதுக்கலுக்கு எதிராக எடுத்த துரித நடவடிக்கைகளைத் தொடர்ந்து இவ் அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலையில் மக்களுக்கு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக தமிழீழ காவல் துறையினருக்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இது பற்றி கருத்து தெரிவித்த காவல் துறை பொறுப்பாளர் நடேசன் அவர்கள் ''விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களுக்கு அவசியமான பொருள்களை நியாய விலையிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உலர் உணவு விநியோகம் துரிதப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகத்தை துரிதப்படுத்துவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. (க)

## தீவகமக்களுக்குஉலர்உணவு நாளை முதல் விநியோகம்

வேலணை, ஊர்காவற்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த முகாம்களில் வசிக்காத இலவச உலர் உணவு பெறும் குடும்பங்கள் தமது பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் யூலை மாதம் இருவாரத்திற்கான உலர் உணவுகளைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இக்குடும்பங்கள் தமது உலர் உணவு அட்டைகள் இன்றியே இந்தஉணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நளைமுதல் இந்த விநியோகம் ஆரம்பமாக உள்ளது என்றும் கூறப்படுகிறது.

## வடக்கிலும் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்

### -பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு நாடுமுழுவதும் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் மாணவர்கள் தோற்ற உள்ளனர்.

வடகிழக்குப் பகுதிகளில் மட்டும் சுமார் இருபதாயிரம் பரீட்சார்த்திகள்இப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இப் பரீட்சை நடைபெற இருக்கிறது. இப் பரீட்சை புலிகளின் கட்டுபபாட்டுப் பகுதியிலுள்ள எண்பத்தைந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3500 வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் மாகாண அரசாங்க சேவைகளில் நிலவும் மூவாயிரத்துஐந்நூறு வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளியன்று வெளியான சிறிலங்கா அரசாங்க வர்த்தமானியில் இதற்கான விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த (சா) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில்நான்கு திறமைச் சித்திகள் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்தோர் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். இந்தப் பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் ஏழாம் திகதி எனவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ENGLISH COURSE**
**ஆங்கிலம்**
*ENGLISH GRAMMAR*
*ENGLISH LITERATURE*
*SPOKEN ENGLISH*

3 மாதப் பயிற்சி, கிழமையில் 2 நாட்கள். *V. N. Kandasamy A. I. B Part I (London) Inter (London)* 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (2832)

**விற்பனையாகிறது**

அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்', 'கஸ்தூரியின் ஆக்கங்கள்' (கவிதைகள், சிறுகதைகள்) ஆகிய நூல்கள் வேகமாக விற்பனையாகின்றன! எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (சி/4703)

**உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்**

பாவித்த தரமான மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும் விற்கப்படும். உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகள் றேடியோக்கள் வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோ ரீவி, டெக் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். எமது புதிய முகவரி 'டில்கா வாச் வேக்ஸ்' (வானவில்கூல்பார் அருகாமை ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்) (2825)

**திருமஞ்ச வெள்ளோட்ட**

யாழ். ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் ஆலய திருமஞ்ச வெள்ளோட்டம் விழா கடந்த புதன்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

இரவு ஆலய முன்றலில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. து. குலசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திருமஞ்சத்தை உருவாக்கிய "சிற்பஜோதி" இராஜரத்தினம் இப்பகுதி மக்கள் சார்பில் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கிச் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய பரிபாலன சபையின் சார்பில் "திருமஞ்ச வெள்ளோட்டம் விழா சிறப்பு மலரும்" வெளியிடப்பட்டது.

## வவுனியா நகரில் வாகன சோதனை தீவிரம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி ஊடாக வடபகுதி நோக்கி பொருள்கள் ஏற்றி வரும் வாகனங்கள் மீதான சோதனைகள் அதிகரித்துள்ளன.

தடைசெய்யப்பட்டுள்ள பொருள்களை வடபகுதிக்கு கொண்டு செல்லப்படுவதை முற்றாகத் தடுக்கும் நோக்குடனேயே இச்சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

லொறிகள், டிராக்டர் ஆகிய வாகனங்களின் மீதே இராணுவத்தினரால் சோதனை அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

தவிர, யாழ். குடா நாட்டிற்கு, வடபகுதியின் ஏனைய இடங்களிலிருந்து பொருள்கள் கொண்டு செல்லப்படுவது மந்த நிலை அடைந்திருப்பதால், கிளிநொச்சி ஓமந்தைப் பகுதிகளில் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. (தி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்
26
02
1969

வீரச்சாவு
19
07
1991

### 2-ம் லெப்டினன்ட் விஜயா
(ஜெயவதனி தம்பிப்பிள்ளை)

திதி 05.08.1992

இப்புவியில் நாமிருந்து ஏங்கிக் கண்ணீருகுத்து
முப்போதும் தவறாதுன் முழுநினைவாய் விழித்திருக்க
காற்றோடு காற்றாகக் கலந்திட்ட எங்கள் உயிரே
ஆற்றாத நினைவலையால் ஆன்மாவும் அமிழுதடி
ஆனாலும்
உன் உயர் கொள்கையின் விடிவிற்காய்
தலைவனின் வழிநின்று வீரமண்ணில்
வித்தானாய் என்பதனால்
அடைகின்றோம் மன அமைதி
வேண்டுகின்றோம் ஆன்மசாந்தி

'ஜெயவாசா'
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

அன்புள்ள அம்மா,
அன்புச் சகோதரிகள்

(2838)

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## பேக்கரி பண்ணை

காலநடை விவசாயப் பயிற்சி

### நெறித் திட்டம்

எமது சங்கம் தென்மராட்சிப் பகுதியில் இயற்றாலை என்னும்இடத்தில் மேற்படிபயிற்சித்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க உள்ளது. தெரிவு செய்யப்படும் பயிலுனர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் தங்குவதற்கு இட வசதியும், உணவும் வழங்கப்படும். இத்துறையில் பயில விரும்பும் ஆண்கள் விண்ணப்பப் படிவங்களை உங்களுக்கு அருகாமையில் இருக்கும் பேக்கரி ஊடாக ரூபா 1/- செலுத்திப் பெற்று பூர்த்தி செய்து அப்பேக்கரி ஊடாக 31-07-1992 க்கு முன்னர் தலைமைச் செயலகத்திற்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மணியம்ஸ் கட்டிடம்,
1 ஆம் மாடி,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

என். பாலவினாயகர்
செயலாளர்

(2839)

ஸ்ரீராம ஜயம்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

1991 ஆம்ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்க்க முன்சென்று வீரச்சாவெய்திய



### 2-ம் லெப் சிறிபதி
(சற்குணநேசன் வைகுந்தவேள்)

வீரப்பிறப்பு:
11-12-1973

வீரசொர்க்கம்:
19-07-1991

பாரில், வீரம் விளைத்து ஆண்டொன்று பூர்த்தி
பாவிகள் நாம் உனைப் பிரிந்து யுகம் ஒன்று போனது
கண்ணே உன் கவின் வதனம் காணாது ஏங்கல்
மண்ணில் பிறந்த பொல்லா மானிடரின் இயல்பே

## நினைவுகூருகின்றோம்...
## 1992 - 07 - 19

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **சதாசிவம் சண்முகராசா** [சம்மாந்துறை, மட்டக்களப்பு]

★ **ஆ. தெய்வேந்திரம்** [சம்மாந்துறை மட்டக்களப்பு]

1987 ஆம் ஆண்டு தம்பனையில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

**விஜி** [யோசப் சத்தியநாதன் - பாசிமோட்டை, வட்டக் கண்டல், மன்னார்]

வவுனியா புளியங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**மதி** [இராசதுரை ஜெயபாலன் - 496, 4-ம் படிவம், வாரிக்குட்டியூர், பாவற்குளம், வவுனியா]

இதே ஆண்டு வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த -

**சுரேஸ்** [குணரட்ணம் புலேந்திரன் - பொற்பதிவீதி, கொக்குவில்]

**கெனடி**

திருக்கோணமலை பன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது சுட்டுக் கொன்று, மரத்தில் தொங்கவிடப்பட்டு எரிக்கப்பட்ட - மூன்று வயதுக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நாலு தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு அம்பாறை காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**தாடி** [பொன்னம்பலம் நாதன் - காரைதீவு-3, அம்பாறை]

மட்டக்களப்பு - கிரான்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். கைலன்** [வடிவேல் சண்முகநாதன்-கிரான், மட்டக்களப்பு]

1989 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பாரதிபுரத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்டு, மானிப்பாய் வங்கிக்கு முன்பாக சடலமாக மீட்கப்பட்ட உடுவில் மல்வத்தையைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - துன்னாலை கோவிற்கடவைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்- கரவெட்டி அரசடிப் பகுதியில் இந்தியப் படையிரால் சுட்டுக் கொல்லப்பட்ட கன்பொல்லை வீதியைச்சேர்ந்த தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வெல்லாவெளி முகாமிலிருந்து தும்பன்கேணி நோக்கிச் சென்ற சிறிலங்காஇராணுவத்தினருடன்மணற்பிட்டிப்பகுதியில் நிகழ்ந்த நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**சிவபாரதி** (வேல்முருகு நாகராசா -மகிழவெட்டுவான், மட்டக்களப்பு)

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**டெஸ்மன்** (கணபதிப்பிள்ளை தணிகாசலம் - 7ஆம் வட்டாரம், மூதூர், திருக்கோணமலை)

**லெப். சகுந்தலன்** (சின்னையா நாகராசா - 95, 2ஆம் படிவம், தர்மபுரம் கிளிநொச்சி)

**கீர்த்தி** (பசுபதி சிறிதரன் -திருவையாறு, கிளிநொச்சி)

**மேகன் / தம்பி** [சண்முகம் மனோகரன் - 167 ஏ, குமாரபுரம், பரந்தன், கிளிநொச்சி]

## அரசாங்க அறிவித்தல்
## சுகாதார சேவைகள் திணைக்களம்

# அரசாங்க அறிவித்தல்

# சுகாதார சேவைகள் திணைக்களம்

# யாழ்ப்பாணம்

## ஆண் பெண் பரிசாரகர்களுக்கான பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறியானது எதிர்வரும் 20-07-1992 அன்று திங்கட் கிழமை யாழ்போதனா வைத்தியசாலையில் ஆரம்பமாக உள்ளது. கீழ்க் காணும் பெயர்களுக்குரியவர்கள் 20-07-1992 காலை 8.30 மணிக்கு எமது பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பெயர்ப் பட்டியல்

| இல. | சுட்டெண் | பெயர்(பெண்) ஊழியர்கள் |
|---|---|---|
| 01 | 35 | வி. இராஜேஸ்வரி |
| 02 | 12 | ஆர். விஜயநந்தினி |
| 03 | 82 | ஜி. ஜமுனராணி |
| 04 | 106 | அ. கௌரிசிவம் |
| 05 | 16 | ஆர். பரமேஸ்வரி |
| 06 | 37 | எஸ். கிருஜா |
| 07 | 76 | கே. பத்மாவதி |
| 08 | 116 | ஆர். வசந்தகுமாரி |
| 09 | 58 | வி. சகாயபாலகி |
| 10 | 90 | ம. கௌசலாதேவி |
| 11 | 38 | ஜ. குணேஸ்வரி |
| 12 | 78 | ந. பூலோகராணி |
| 13 | 33 | க. சிவனேஸ்வரி |
| 14 | 32 | து. யோகமலர் |
| 15 | 102 | கி. தேவமலர் |
| 16 | 108 | சி. சித்திராணி |
| 17 | 77 | அ. மங்களேஸ்வரி |
| 18 | 114 | எஸ். கௌரியம்மா |
| 19 | 117 | பொ. கிருஸ்ணவேணி |
| 20 | 67 | சு. அருந்ததியம்மா |
| 21 | 91 | யோ. கமலதேவி |
| 22 | 31 | மோ. சிவஞானதேவி |
| 23 | 57 | ஆ. இந்திராகாந்தி |
| 24 | 75 | வே. ஜீவராணி |
| 25 | 79 | பா. சரஸ்வதி |
| 26 | 13 | கு. புஸ்பராணி |
| 27 | 18 | தி. அன்னமலர் |
| 28 | 36 | மா. தங்கேஸ்வரி |
| 29 | 105 | சி. சகுந்தலாதேவி |
| 30 | 88 | ச. ஜெயந்தினி |
| 31 | 39 | கே, பேரின்பரதி |
| 32 | 118 | உ. ரேவதி |
| 33 | 19 | க. விமலாதேவி |
| 34 | 69 | கு. ஜமுனா |
| 35 | 96 | பொ. பராசக்தி |
| 36 | 98 | பொ. தவயோகி |

| இல. | சுட்டெண் | பெயர்(ஆண்) ஊழியர்கள் |
|---|---|---|
| 01 | 27 | இ. பிரேம்குமார் |
| 02 | 47 | ஆ. ஜெயராஜா |
| 03 | 104 | க. சிவரட்ணம் |
| 04 | 81 | வி. சுந்தரலிங்கம் |
| 05 | 04 | என். கனகராஜா |
| 06 | 28 | சி. கந்தசாமி |
| 07 | 23 | கே. பஞ்சலிங்கம் |
| 08 | 03 | த. தியாகராஜா |
| 09 | 02 | வி. யோகேஸ்வரன் |
| 10 | 29 | பொ. தங்கராஜா |
| 11 | 101 | செ. பரமநாதன் |
| 12 | 26 | பா. அமலதாஸ் |
| 13 | 51 | மு. கதிரன். |
| 14 | 85 | இ. குணரட்ணம் |
| 15 | 107 | அ. உதயநாதன் |
| 16 | 92 | வீ. மகேஸ்வரன் |
| 17 | 54 | வி. மகாலிங்கம் |
| 18 | 110 | இ. தங்கராஜா |
| 19 | 07 | ப. திருச்செல்வம் |
| 20 | 01 | சு. சூரியகாந்தன் |
| 21 | 65 | எம். கணேசபிள்ளை |
| 22 | 24 | இ. செல்வரட்னம் |
| 23 | 43 | வே. திருஞான சம்பந்த மூர்த்தி |
| 24 | 74 | பி. பேரின்பராஜா |

**டாக்டர் பொ. இரத்தினசபாபதி,**
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனை,
இலக்கம் — 59 விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(4924)

---

பாரில், வீரம் விளைத்து ஆண்டொன்று பூர்த்தி
பாவிகள் நாம் உனைப் பிரிந்து யுகம் ஒன்று போனது
கண்ணே உன் கவின் வதனம் காணாது ஏங்கல்
மண்ணில் பிறந்த பொல்லா மானிடரின் இயல்பே
தமிழ் செய்த தவப்பயனால் அவதரித்த தனையா
தாய் மொழியின் விடுதலைக்காய் களம் புகுந்த வீரா
சிங்களவர் ஆட்சி நாளை சிதைவது இனி உறுதி
சங்கத் தமிழ் அரியணையில் ஏறிவிடும் காண்போம்.

**எங்கள் வீர வணக்கம்**


கற்கோவளம்.
பருத்தித்துறை

தந்தை, தாய், சுற்றத்தார்.

(2840)

---

# 1-ம் வருட நினைவு நாள்



## வீரவேங்கை லீனஸ்

(ஜோசப் கிருபைராஜா [நேசன்] )

தாயின் மடியில் 1969 – 11 – 02

மண்ணின் அணைப்பில் 1991 – 07 – 19

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்
(சங். 138: 8)

கல்லறையில் உமை வைத்து
கண்ணீரால் நனைத்திட்டோம்
உலகினில் வைக்க இயலாமல்
உள்ளத்தில் வைத்து உருகுகிறோம்.

கண்ணீரை அர்ச்சனையாகப் படைக்கிறோம்

புதுக்கமம்
உயிலங்குளம்
மன்னார்.
உடுவில்
மருதனார்மடம்.

உங்கள் பிரிவால் துயருறும்
தகப்பன், தாய், சகோதரர்கள்
மருமக்கள், உறவினர்

(2833)

---

**கீர்த்தி** (பசுபதி சிறிதரன் -திருவையாறு, கிளிநொச்சி)

**மேகன் / தம்பி** [சண்முகம் மனோகரன்- 167 ஏ, குமரபுரம், பரந்தன், கிளிநொச்சி]

**குகன்** (சுப்பையா செல்வேஸ்வரன் - கரவெட்டித் திடல், புளியம்பொக்கணை, கிளிநொச்சி)

இதேபகுதியில், சிறிலங்காப் படையினர் மேற் கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். துஷ்யந்தன்** [சிவயோகநாதன் பார்த்தீபன் - 'சத்திரசபா' தம்பசிட்டிவீதி, பருத்தித்துறை]

மட்டக்களப்பு திருப்பழுகாமம், கோவில்போரதீவு, பெரியபோரதீவு, வெல்லாவெளி, கற்சேனை, ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு பின்னர், கருகிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 35 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது, வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**அசோக்** [தெய்வேந்திரம் ரவீந்திரன் - தும்பளை கிழக்கு, பருத்தித்துறை, யாழ்.]

**லெப். ராஜேந்தர்** (பொன்னுத்துரை யோகேஸ்வரன் வேப்பங்குளம், மன்னார்)

**கப்டன் பசுபதி** (இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன்- மறவன் புலவு, சாவகச்சேரி, யாழ்)

**2-ம் லெப். விக்ரம்** (அருளானந்தம் சுந்தரராசா- றெட்பானா, விசுவமடு, முல்லைத்தீவு)

**சிதம்பரநாதன் / நாதன்** (தம்பு ஆனந்தராஜா கோயிலாக்கண்டி., நாவற்குழி, யாழ்.)

**குருமரன்** (இராசையா சந்திரசேகரம் நாகர் கோயில்வீதி, எழுதுமட்டுவாள், யாழ்)

**பாபு** (அந்தோனி நிக்கல் - கோரக்கல்லிமடு, கிரான், மட்டக்களப்பு)

**நிதி** (சோமநாதன் நித்தியானந்தமூர்த்தி -107, ஜெயந்திநகர், கிளிநொச்சி)

**குணராஜ்** (அமுதலிங்கம் குமார் - தர்மபுரம், கிளிநொச்சி)

வவுனியா பேயாடி, கூழாங்குளம் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற் கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

யாழ்-அச்சுவேலிப்பகுதியில், சிறிலங்காப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தந்தை, மகன் ஆகிய 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள்ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4723)

### சிந்தனைக்கு

பாராட்டுவதிலும் சரி, குற்றம் காண்பதிலும் சரி மனிதர்கள் அவசரப்பட்டு விடுகின்றனர். ஆகவே மற்றவர்கள் உன்னைக் குறித்துப் பேசுவதைப் பொருட்படுத்தாதே.

- பகவான் இராமகிருஷ்ணர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## தமிழகம் - தமிழீழம் பிளவுபடுத்தச்சதி

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு செய்வதற்கு திரு. கிட்டு அண்மையில் பாகிஸ்தான் சென்றார் என்றும், ஒருவாரம் தங்கியிருந்து ஆயுதக் கொள்வனவை முடித்து பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகளையும் சந்தித்து விட்டு ஐரோப்பிய நாடொன்றிற்கு திரு. கிட்டு திரும்பிச் சென்றார் என்றும் தமிழகத்தில் வெளியாகும் 'தினமணி' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானும் இதையொத்த கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். அக்குற்றச்சாட்டில் ராஜீவ் காந்தியின் கொலையை விடுதலைப் புலிகள் செய்து முடிப்பதற்கு பாகிஸ்தான் புலனாய்வுத் துறை தகவல்களைக் கொடுத்து உதவியதுஎனத் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் பஞ்சாப், அஸாம் மாநிலத் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு எனப் பிரசாரம் செய்த, இந்திய அரசாங்கமும் பத்திரிகைகளும் தற்பொழுது பாகிஸ்தானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேரடித் தொடர்பு உள்ளதாகக் காட்ட முற்படுகின்றன.

இவ்வாறாக பாகிஸ்தானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாகவும், பாகிஸ்தான் உளவுத்துறை புலிகளுக்கு ஆயுதமும், தகவல்களும் வழங்குவதாகவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளும், செய்திகளும் தமிழீழ மக்களுக்கு எதிராக இந்திய அரசும், பத்திரிகைகளும் திட்டமிட்டு மேற்கொள்ளும் சதியாகும்.

இந்தியாவும் - பாகிஸ்தானும் நீண்டகாலப் பகை நாடுகள். இருநாடுகளும் சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து ஒன்றை ஒன்று சந்தேகக் கண்ணுடனேயே நோக்கி வருகின்றன. இதே வேளை, மூன்று போர்களையும் சந்தித்து உள்

# இந்தியாவின் நம்பிக்கை துரோகமும் தமிழீழ மக்களின் அவலநிலையும்

## ஓர் இந்திய அரசியல் விமர்சகரின் பார்வையில்

நான் இங்கே எழுதப் போகும் கருத்துக்களை மிகவும் துல்லியமான உண்மைகளாகக் கூறவில்லை. ஆனால் யதார்த்த நிலைமை என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்தக் கருத்துக்கள் உதவும். 40 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது, 1950 களில் நடந்த ஒருசம்பவத்தை நினைவுபடுத்துகின்றேன். அப்போது நேபாளத்தில் 'ராணா'க்களின் ஆட்சி நடந்து வந்தது இந்த 'ராணா' பரம்பரையினரின் மன்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாயகஆட்சியை நிறுவ, நேபாள காங்கிரஸ் போராடியது. நேபாள காங்கிரசுக்கு இந்தியாவில் ஏராளமான ஆதரவாளர்கள் உண்டு. நேபாள காங்கிரஸ் கட்சியினரும் இந்தியாவில் இருந்தார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நடந்த சுதந்திரப் போராட்டத்தில் நேபாள காங்கிரஸ் தலைவருக்கு மிகவும் ஈடுபாடு இருந்தது. இதே போன்ற ஒரு சுதந்திரப் போராட்டத்தைத் தங்கள் நாட்டிலும் நடத்த வேண்டும் என்ற உணர்வினைப் பெற்றிருந்தனர்.

அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த நேரு, நேபாள காங்கிரஸ் தலைவர்களை மிகத்தீவிரமாக ஆதரித்தார். தங்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு இந்தியா உதவும் என்ற நம்பிக்கையை நேபாளக் காங்கிரசார் வளர்த்துக் கொண்டிருந்தனர். விரைவிலோ அல்லது சற்றுக் காலம் கடந்தோ நேபாளத்தில் மன்னர் ஆட்சி ஒழிந்து ஜனநாயக ஆட்சி மலரப் போவது உறுதி என்று நம்பிக் கொண்டிருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் தான் ஒரு திடீர் திருப்பம். நேரு திடீரென்று 'ராணா'க்களுடன் நண்பர்களாக முடிவு செய்தார். இந்தியாவில் தங்கியிருந்த எல்லா நேபாள காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்ய உத்தரவிட்டார். நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக நேபாள காங்கிரசார் நடாத்திய ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு இந்தியக்கடற்பரப்பு வழியாக

கிரசின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறவர்களை இந்திய இராணுவம் கொடூரமாகச் சித்திரவதை செய்தது.

இந்தச் சம்பவம் முட்டாள்தனமாகவும், கேலிக்குரியதாகவும் இல்லையா? ஜனநாயக விரோத சக்திகளையும் பாதுகாப்பதற்குத்தான் இந்தியா இருக்கின்றதா? இதே பின்னணியில் விடுதலைப் புலிகளின் அவல நிலையையும் எண்ணிப் பாருங்கள்.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக்கலவரத்தையொட்டி ஏராளமான தமிழர்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்தார்கள். தங்கள் வீடுகளையும், உடைமைகளையும் விட்டுவிட்டு ஆயிரக்கணக்கான தமிழர்கள் தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த எம். ஜி. ராமச்சந்திரன் இதனால் மிகவும் வேதனைக்குள்ளானார். அவர் இந்த அகதிகளுக்கு இயன்றளவு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் வற்புறுத்தினார். மாநில அரசின் கஜானாவில் இருந்தே போராளிகளுக்கு நிதிவழங்கவும் எம். ஜி. ஆர். ஏற்பாடு செய்தார். இந்தப் பணத்தைக் கொண்டு போராளிகள் சிங்கப்பூரில் இருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்தபோது டில்லி அரசு அதைக் கண்டும் காணாததுமாக ஒதுங்கிக் கொண்டது. அடுத்த சில ஆண்டுகளிலேயே வேறு மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

இந்திரா கொலைசெய்யப்பட்ட பின் ராஜீவ் பிரதமராக வந்தவுடன் இலங்கை அரசாங்கத்துடன் ஒரு உடன்பாடு செய்துகொள்ள முன்வந்தார். இலங்கைப் பிரச்சினையை ''சுமுக நிலைக்கு மாற்ற'' அதி வேகமான நடவடிக்கைகளை எடுக்க முன்வந்தார். ஏற்கனவே பல ஆண்டுகளாக, இந்தியாவின் ஆதரவோடும் அனுமதியோடும் இங்கே

காந்தி எடுத்தார். இலங்கைக்கு 'அமைதிப்படையை' அனுப்ப முடிவு செய்தார். இலங்கை இராணுவத்துடன் சேர்ந்துகொண்டு போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்து இலங்கை அரசு சுமுகமான நிர்வாகத்தை மேற்கொள்ளச் செய்வது அமைதிப் படையின் வேலை. விடுதலைப் புலிகளின் தலைவர்களை டில்லிக்கு அழைத்துப்போய் ரகசியமான இடத்தில் தங்கவைத்து ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ராஜீவ் கட்டாயப்படுத்தினார். போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைப்பறிக்க இந்திய அமைதிப்படைதொடங்கியபோது புலிகள் அதற்கு சம்மதிக்க மறுத்தனர். ராஜீவ் காந்தியின் நடவடிக்கைகள் போராளிகளுக்கு சந்தேகத்தை எழுப்பின. மேலும் ஒரு வேதனையான ஒரு சம்பவம் நடக்கின்றது. எம். ஜி ஆர் மரணமடைகின்றார். தமிழ் நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அரசாங்கத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதே சிறந்தது என்ற புத்திசாலித்தனமான முடிவோடு விடுதலைப் புலிகள் தி. மு. க, ஆட்சியில் முதல்வர் கருணாநிதியையும் சந்தித்தனர். அவருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டார்கள், இது டில்லியிலுள்ள காங்கிரஸ்கட்சிக்குகோபத்தை உண்டாக்கியது. ஏற்கனவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க மறுத்த விடுதலைப் புலிகள் இப்போது தி. மு. க. ஆட்சியுடனும் நல்

விடுதலைப் புலிகளை எதிர்த்தார்.

இப்போது நாடாளுமன்றத்தில் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும். என்ற புதிய கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. இந்தக் கோரிக்கையை எழுப்புவதற்கு முன் இதுபற்றி ஒரு தேசபக்தியுள்ள ஈழத்தமிழனின் கண்ணோட்டத்தில் நிலைமையை மேலோட்டமாகக் கூட பரிசீலிக்காமல் இந்தக் கோரிக்கைகளை முன் வைக்கிறார்கள். இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்று ஈழத்தமிழர்கள் முடிவு செய்தது ஒன்றும் மன்னிக்க முடியாத குற்றமாகிவிட முடியாது. தங்கள் நலனுக்கு உகந்தது எது என்பதை முடிவு செய்யக் கூடிய உரிமை இந்திய அரசின் முடிவுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கக் கூடாது என்று கூறுவதில் நியாயம் இல்லை.

டில்லியில் ஆளும் அரசியல்வாதிகளோ, 'மேடம்' ஜெயலலிதாவோ விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, விடுதலைப்புலிகள் இயக்கம் ஈழத்தமிழர்களின் நம்பிக்கையையும், மதிப்பையும் பெற்ற இயக்கமாக வளர்ந்திருக்கிறது என்பது உண்மை. பெரும்பாலான ஈழத்தமிழர்கள் இந்த இயக்கத்திற்கே பேராதரவு தருகின்றார்கள் என்பதும் உண்மை. வடக்கு - கிழக்கு மாநிலத்தில் நிலைபெற்றிருக்கும் விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் இலங்கைஅரசு வெற்றி பெறவும் முடியாது. புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே எதிர்காலத்தில் யுத்

> தமிழீழ மக்களுக்கு இந்தியா நம்பிக்கைத்துரோகம் இழைத்துவிட்டது. தமிழீழ மக்கள் தங்கள் நலனுக்கு உகந்தது எது என்பதை முடிவு செய்யக் கூடிய உரிமை இந்திய அரசின் முடிவுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க கூடாது என்று இந்தியா கூறுவதில் நியாயம் எதுவுமில்லை. இவ்வாறு கூறுகிறார் இந்தியாவின் பிரபல அரசியல் விமர்சகர்களில் ஒருவரான அசோக மித்திரா அவர் விடுதலைப்புலிகளை இந்தியா தடைசெய்வதற்கு முன்பாக 'கரண்ட்' என்னும் ஆங்கில வார இதழுக்கு எழுதிய கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தாமல், அங்கே என்ன நடக்கிறது என்பதை, தமிழ் நாட்டு மக்களிடம் மூடிமறைத்துக் கொண்டு காலத்தை நீட்ட முடியாது. விடுதலைப் புலிகளை தடை செய்வதன் மூலம் தமிழ் நாட்டுக்கும், ஈழத்திற்கும் இடையே உள்ள உறவைத் துண்டித்து விட்டால் ஈழத் தமிழர் பிரச்சினை எக்கேடு கெட்டுப்போனாலும் என்ன என்ற முடிவுடனேயே தமிழ் நாட்டுத் தமிழர்கள் இருந்து விடமாட்டார்கள். இலங்கையில் தாக்குதல் தொடர்ந்து மீண்டும் ஈழத் தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு வந்தால் தமிழ் நாட்டு மக்களின் அனுதாபம் அவர்கள் மீது வராமல் போய்விடாது; அந்த நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் மக்களிடையே உருவாகும் இந்த இயற்கையான அனுதாப உணர்வுகளை இப்போது போல் எதிர்த்து நிற்க முடியாது. அந்தக் கால கட்டத்தில் இப்போது போல் கடுமையாக விடுதலைப் புலிகளை எதிர்த்துக் கொண்டிருந்தால் அதற்கு எதிர்ப்புகள் இல்லாமல் போகாது. அந்த நேரத்தில் டில்லி, விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளை எடுத்தால் மக்கள் ஆத்திரம் கொண்டு பொங்கி எழுவார்கள். எரிமலையாக வெடிப்பார்கள்; எதிர்ப்புகள் வன்முறையாகவே இருக்கும்.

எனவே விடுதலைப்புலிகள் மீது நமக்குள்ள ஆத்திரமும், அவர்களை ஏற்கவே முடியாது என்ற சகிப்பற்ற தன்மையும் கூட திட்டமிட்ட தெளிவான பார்வையோடும், காரணங்களோடும் இருக்க வேண்டும். ஈழத் தமிழ் போராளிகளும் கூட, தங்களின் நிலையை நியாயப்படுத்துவதற்கு காரணங்கள் இருக்கின்றன. இனத்தின் பெருமை, தேசத்தின் போராட்டம்

வேளை, மூன்று போர்களையும் சந்தித்து உள்ளன.

அத்தோடு, இவ்விரு நாடுகளும் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் மற்றநாடு தலையிடுவதாக பரஸ்பரம் குற்றமும் சாட்டி வருகின்றன. இந்நிலையில் பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் நடக்கும் தீவிரவாதச் செயல்களுக்கு பாகிஸ்தானே காரணம் என இந்தியா குற்றம் சாட்டும் அதே வேளை, சிந்துமாகாணத்தில் நடக்கும் தீவிரவாதச் செயல்களுக்கு இந்தியாவையே காரணம் என பாகிஸ்தான் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நீண்டகாலப் பகை காரணமாக இந்திய மக்கள் பாகிஸ்தான் மீது எப்பொழுதும் சந்தேகமும், வெறுப்புமே கொண்டுள்ளார்கள். இந்திய அரசாங்கமும் இந்நிலையைத் தூபமிட்டு வளர்த்து வருகின்றது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் -பாகிஸ்தான் உளவுத் துறையினருக்கும் தொடர்பு என்ற புரளியைக் கட்டவிழ்த்து விடுவதன்மூலம் தமிழக மக்களையும், இலங்கைத் தமிழ் மக்களையும் நிரந்தரமாகப் பிரித்துவிடுதல் ஒரு இலகுவான காரியமாகும்.

ஆனால், இது இன்றைய தென்னாசிய அரசியல் சூழ்நிலைக்கு முற்றிலும் புறம்பானதும், அரசியல் விவேகமற்றதுமான ஒரு கூற்றாகும். பாகிஸ்தானும் - சிறிலங்காவும் மிகவும் சிறந்த நட்பு நாடாகும். அத்தோடு, விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவத்திற்கு ஆயுந தளபாட உதவியும், பயிற்சியும் அளித்துவரும் மிக நெருங்கிய நட்பு நாடும் ஆகும். மேலும் சிறிலங்காவில் உள்ள முஸ்லிம்களின் நிலைப்பாடும் தமிழருக்கு எதிராகவுள்ளது. இந்நிலையில் பாகிஸ்தான் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்குகின்றது, புலனாய்வுத்துறை தகவல் வழங்குகின்றது என்பதெல்லாம் ஆதாரம் எதுவுமற்ற குற்றச்சாட்டாகும்.

இவற்றை நோக்கும் போது இந்தியாவிலுள்ள அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் முழங்காலுக்கும், மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போடுவதில் மிகவும் சாமர்த்தியசாலிகள் என்பதைக் காட்டியுள்ளன. இல்லாத ஒன்றை உருவாக்குவதிலும் இருப்பதை இல்லாமல் செய்வதிலும் இவர்கள் திறமைசாலிகள். தண்ணீர் கேட்டால் குடம் தருவோம் எனக் கூறும் இந்திய அரசியல்வாதிகளின் ஏமாற்றுக்களை தமிழக மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆயுதங்கள் கொண்டு செல்வதைக் கண்காணித்து பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். அத்தோடு இந்திய இராணுவமும் மன்னர்கள் ஆட்சியைப் பாதுகாக்க நேபாளத்துக்குப் போனது. நூற்றுக்கணக்கான நேபாளியர்கள் இந்திய இராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்டனர். நேபாள காங்

போர்ப்பயிற்சி முகாம்களை அமைத்து பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தனர் போராளிகள். இவர்கள் ராஜீவ் காந்தி ஏற்படுத்தும் எத்தகைய ஒப்பந்தமாக இருந்தாலும் இதை ஏற்ந வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர்.

மற்றொரு அவசர அவசரமான முடிவையும் ராஜீவ்

டதை மத்திய காங்கிரஸ் கட்சியால் சகித்துக்கொள்ள முடியவில்லை. தி.மு.க.கட்சி நீடிக்கவில்லை. கலைக்கப்பட்டது. அடுத்து எம். ஜி. ஆர்: பெயரைக் கூறி கட்சிக்கு வந்தார் ஜெயலலிதா. எதிரிக்கு எதிரி நண்பன் என்பதில் உறுதியான நம்பிக்கை இவருக்கு உண்டு. எனவே அவர்

தலைப்புலிகளும் ஈழத்தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய ஒரு துடிப்பான இயக்கமாக செயற்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். ஈழத்தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் இடையே உள்ளது 'தொப்புழ் கொடி' உறவு! இந்தப் பின்னணியில்

இயக்க இயல் ரீதியான முரண்பாடுகள் தோன்றும் போது எது சரி, எது தவறு என்பதைக் கூட தீர்மானிப்பது கடினமாகிவிடும். இந்தப் பின்னணியில் எடுக்கப்படுகிற முடிவுகள் புத்திசாலித்தனமாகவே இருக்கவேண்டும்.

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பு ஊசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குஉட்பட்டவீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசிமருந்து ஏற்றும் திட்டத்தின்மூன்றாம் கட்டம் நாளை திங்கட்கிழமை முதல்ஆரப்பமாகவுள்ளது. ஆகஸ்ட் ஏழாம் திகதி வரை நீடிக்கும் இந்தச் செயற்பாட்டின் போது தடுப்பூசி ஏற்றப்படும் நேரம், இடம் என்பவற்றை அறிய ஆவலுடையோர் இல. 107 கண்டி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாநகராட்சி மன்றத்தின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அல்லது வட்டாரங்களின் பொது சுகாதாரப்பரிசோதகர், குடும்ப நல சேவையாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர், சந்தை மேற்பார்வையாளர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படாத நாய்கள் யாழ். மாநகராட்சி மன்றத்தினரால் பின்னர் பிடித்து அழிக்கப்படவுள்ளது. எனவே நாய் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர் தமது நாய்களுக்கு தவறாது தடுப்பூசி போட்டுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## சுயவேலைவாய்ப்பு எனகூறி ஒரு கோடி ரூபா மோசடி

(கொழும்பு)

சுய வேலைவாய்ப்புக்கு உதவுவதாகக் கூறி இளைஞர், யுவதிகளையும், பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்களையும் ஏமாற்றி சுமார் ஒரு கோடி ரூபா வரை மோசடி செய்த முப்பது வயது இளைஞர் ஒருவரை சிறிலங்கா இரகசியப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

ஓட்டோ ரிக்ஷா பெற்றுத் தருவதாகக் கூறி தலா 96,000 ரூபா வீதம் இருநூற்றி எண்பது பேரிடம் சுமார் எழுபத்தைந்து இலட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்றும், தையல் இயந்திரம் பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் முப்பதாயிரம் ரூபா வரை மோசடி செய்துள்ளார் என்றும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஹேமந்த ஒவிட்டிகம என்னும் இந்த நபர் கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் குளிரூட்டப்பட்ட ஆடம்பர அறை ஒன்றினை வைத்திருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு அப்பியாசக்கொப்பி வழங்குவதாகக்கூறி தலா 500 ரூபா வீதம் மோசடி செய்தார் எனவும் கூறப்படுகிறது.

## ஜெருசலேமிலுள்ள இஸ்லாமிய பல்கலை.

# இஸ்ரேலிய ராணுவத்தால் முற்றுகை 4000 மாணவர் உணவின்றி அவதி

(ஜெருசலேம்)

நப்ளுஸ் - அல் நஜா பல்கலைக்கழக வளாகத்தை இஸ்ரேல் இராணுவத்தினர் சுற்றி வளைத்து முற்றுகையிட்டுள்ளனர்.

இப் பல்கலைக் கழகத்தினுள் பயங்கர ஆயுதங்கள் இருக்கலாம் எனக் கருதியே முற்றுகையிடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இதனால் அங்குள்ள சுமார் நாலாயிரம் மாணவர்களும் பேராசிரியர்களும் வெளியேற முடியாது தவிக்கின்றனர். இவர்களுக்கு உணவு விநியோகத்தை தடுத்து நிறுத்தியுள்ள இராணுவத்தினர் வளாகத்தினுள் செய்தியாளர்கள் செல்லவும் இதுவரை அனுமதிக்கவில்லை.

நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. குழுக்களாக பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறும்படி இராணுவம் விடுத்த வேண்டுகோளை மாணவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இப்பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைக்கவேண்டுமென்று பலஸ்தீன விடுதலை இயக்கம் ஐக்கிய நாடுகள் சபையைக் கோரியுள்ளது.

அதேவேளை முற்றுகைக்குள்ளாகியிருக்கும் மாணவர்களுக்கு ஆதரவாக பலஸ்தீன நிறுவனங்களின் தலைவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

வளாகத்தினுள் நாம் பிரவேசிக்கப்போவதில்லை என்றும் பிரவேசிக்கும்படி எம்மை யாராவது தூண்டினால் அவர்களே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்மென்று பிராந்திய இராணுவத்தளபதி அறிவித்துள்ளார்.

இப்பிரச்சினை முன்னைய அரசு விட்ட தவறினால் ஏற்பட்டது என்று புதிதாகப்பதவி ஏற்றிருக்கும் இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார். எனினும் இவ்விடயம் குறித்து ஓர் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## பாகிஸ்தான் ஜனாதிபதியை பதவி விலக கோரிக்கை

பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக்கான் பதவிவிலகவேண்டுமென்று பாகிஸ்தானின் எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இராணுவத்தையும்ஆட்சிநிர்வாகத்தையும் அதிபர் குலாம் இஷாக்கான் குலைத்து வருவதாக முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ தலைமையிலான எதிர்க்கட்சிகள் நிறைவேற்றிய தீர்மானமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அதிபர் குலாம் இஷாக்கான் பழிவாங்கும் நோக்கத்தோடு செயற்படுவதாகவும், தேசிய நலன்களை அடிக்கடி பலியிடுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### தென் ஆபிரிக்காவுக்கு

## ஐ.நாவின் விசேட தூதுவராக சைரஸ் வான்ஸ் நியமனம்

தென்னாபிரிக்காவில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்கள் பற்றி விசாரணை செய்யவும், பல்லின மக்கள் அரசியல் சாசனம் பற்றிய பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கும் வழிவகை பற்றிப் பரிந்துரைக்கவும் ஐ. நா. சிறப்புத் தூதுவராக அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளரான சைரஸ் வான்ஸ் நியமிக்கப் பட்டிருப்பதாக ஐ. நா. தலைமைச் செயலாளர் பூட்டர்ஸ் காலி தெரிவித்தார்.

ஈழநாதம்

## வடக்கு, கிழக்கு மாகாணங்கள்

# பிரிந்தாலென்ன இணைந்தாலென்ன முஸ்லிம்களுக்கு சுயாட்சி வேண்டும்

(கொழும்பு)

அரசாங்கம் வடக்கோடு கிழக்கை நிரந்தரமாக இணைப்பதற்கான முடிவுக்கு வந்தால் வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் ஒரே முஸ்லிம் சுயாட்சி அமைப்பின் கீழ் வர ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.


மாறாக வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்க வேண்டும் என அரசாங்கம் முடிவெடுத்து மாகாணசபைகளும் அனுமதிக்கப்பட்டால், கிழக்கில் வாழும் சகல முஸ்லிம்களையும் ஒன்றிணைக்கும் வகையில் ஒரு முஸ்லிம் மாகாணசபை உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், வடக்கோடு கிழக்கை நிரந்தரமாக இணைக்கும் விடயத்திலோ அல்லது நிரந்தரமாக பிரிக்கும் விடயத்திலோ முஸ்லிம்கள் தலையை உடைத்துக் கொள்ளத் தேவையில்லை.

அரசாங்கத்தை நம்பிப் பிரிக்கக் கோருவதும் தமிழ்க் குழுக்களை நம்பி இணைக்கக் கோருவதும் சமமான ஆபத்தான விஷயங்கள் என்பதே முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் நிலைப்பாடாகும் என தெரிவிக்கப்படுகிறது.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியைகளும்



தோற்றம் 29 - 03 - 1933

மறைவு 20 - 06 - 1992

### சின்னத்தம்பி பாலசிங்கம்

திதி வெண்பா

ஆண்டது ஆங்கிரச ஆனி மதிதன்னில்
பூண்ட திதி அவசப் பஞ்சமியில் — நீண்டபுகழ்
அண்ணலார் பாலசிங் கம்அரன் பாதத்தை
நண்ணினான் வானோர் தொழ''

அமரத்துவம் அடைந்த முன்னாள் மிருசுவில் கிராம சபைத் தலைவர் திரு. சின்னத்தம்பி பாலசிங்கம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் நாளை 20-07-1992 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் உற்றார், உறவினர் குடும்ப சகிதம் வருகை தந்து வைபவத்தில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் பங்கு கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

''திருவருள்''
உசன், மிருசுவில்
(2834)

இங்ஙனம்
திருமதி தயாவதி பாலசிங்கமும்
பிள்ளைகளும்

## விளையாட்டு விழா

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவுகள் இணைந்து நடாத்தும் தீவக இடம் பெயர்ந்தோர்க்கான விளையாட்டு விழா நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

வேலணை ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திரு. இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் வடக்கு-கிழக்கு மாகாண பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் செ. பத்மநாதன், யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கு. பாலகிருஷ்ணன், உதவி செயல் திட்டப்பணிப்பாளர் திரு. எம். எஸ். இறேனிஸ், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் அழைக்கப்பட்டுள்ளனர். (14)

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

பொது எழுதுநர் சேவை தரம் Iக்கான பதவி உயர்வு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. பொது நிர்வாக இணைந்த சேவை அமைச்சினால் இப்பதவி உயர்வுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. (24)

## போர்க்கால யாத்திரையும் எழுச்சிக் கூத்தும்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பிரிவினர் போர்க்கால யாத்திரை மற்றும் எழுச்சிக் கூத்து என்பவற்றை கிராமந்தோறும் நிகழ்த்தி வருகின்றனர்.

தமிழீழத்தில் தமிழரின் தேசிய பலத்தைச் சிதைத்து விடும் நோக்கத்தோடும், சிறிலங்காவின் படைத்துறைத் தலைமை தற்போது முடுக்கி விட்டிருக்கின்ற இராணுவ நடவடிக்கைகளையும், இவற்றுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சிகளையும், மக்கள் விடுதலைப் புலிகளோடு இணைந்து போராடுவதையும் மையமாகக் கொண்டு இந்தப் போர்க்கால யாத்திரையும் எழுச்சிக் கூத்தும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போர்க்கால யாத்திரையின் போது கருத்தோவியங்களும் இடம்பெற்றுள்ளன.

## மேஜர் முரளி நினைவு புதிர்ப்போட்டி இறுதிச்சுற்று

மேஜர் முரளி நினைவாக நடாத்தப்பட்டு வரும் பாடசாலைகளுக்கிடையிலான புதிர்ப்போட்டியில் யாழ். மாவட்டத்திற்கான இறுதிச்சுற்றுப் போட்டி நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது மேற்படி இறுதிச் சுற்றிற்கு தெரிவான பாடசாலைகளின் குழுக்கள், அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபத்திற்குச் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## அகதிகள் தொழில் முயற்சி; ஐ. நா. அறிமுகப்படுத்தும்

(யாழ்ப்பாணம்) ... பேறிகளாக மாறி விடுவர்.

# அயோத்தியா கட்டடவேலை; நாடு முழுவதும் கவலை

**- எஸ். பி. சவான்**

(டில்லி)

அயோத்தியாவில் நடக்கும் கட்டுமாணப் பணிகள் நாடு முழுவதும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகவும், பாபர் மசூதியின் பத்திரத்துடன் மட்டும் இவ் விடயம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும் நாட்டின் சமய சார்பற்ற நெறிகள், நீதிமுறையின் புனிதத் தன்மை மற்றும் சட்டத்துறையின் கண்ணியம் ஆகிய அனைத்துடனும் இதுதொடர்பு கொண்டிருக்கிறது என்றும் இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்தார்.

நேற்று புதுடில்லியில் அயோத்தி பிரச்சினை தொடர்பாக விவாதிப்பதற்காக கூட்டப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலின் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் மக்களை ஒருங்கிணைக்கும் இந்த அடிப்படை நெறிகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இடைக்காலத் தடைவிதிக்கப்பட்ட பின்பும் உத்தரப் பிரதேச அரசு கட்டடப் பணிகளை தொடர்வதற்கு வருத்தமும் தெரிவித்தார். கட்டடப் பணி தொடர்ந்தும் நடக்கும் என்று பாரதீய ஜனதா கூறியிருப்பதற்கும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

## கேரள எல்லையில் புலிகள் நடமாட்டமாம்

(சென்னை)

தமிழக கேரள எல்லையில் புலிகள் நடமாட்டம் பற்றி ஆராய தமிழ்நாடு கேரளா உயர்மட்டப் பொலிசார் மாநாடு நடாத்தியுள்ளனர். உடுமலைப்பேட்டை, கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் புலிகள் சார்பானவர்களின் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்கள் பல இம் மாநாட்டின் போது பரிமாறிக் கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

## ஆட்டோ சங்கருக்கு மரணதண்டனை ஊர்ஜிதம்

கிரிமினல் குற்றவாளியான ஆட்டோ சங்கர் மற்றும் அவரது நண்பர்களுக்கும் கீழ் நீதிமன்ற நீதிபதி விதித்திருந்த மரணதண்டனையை சென்னை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. 1987 / 88 ஆம் ஆண்டுகளில் சென்னை புறநகர் பகுதியில் இடம் பெற்ற பல்வேறு கொலைச் சம்பவங்களோடும் ஆட்டோ சங்கர் தொடர்பு படுத்தப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்டு இருந்தது தெரிந்ததே.

## வேலையற்றோர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை முழுவதிலும் எட்டு லட்சத்து நாற்பதாயிரம் பேர் வேலையற்று இருப்பதாக புள்ளிவிபரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் எண்பது சதவிகிதமானோர் கிராமப் புறத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தீவிரவாதிகளிடம்

வானூர்தியையும் இறங்க விடாமல் சுட்டார்கள் இதனால் விமானம் தரையிறங்காமல் திரும்பியது.

மீண்டும் அக்கிராமத்தை கைப்பற்ற இந்தியா இராணுவம் முயற்சித்து வருவதாகவும் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பி.பி.ஸி தெரிவித்துள்ளது.

## இவ்வருட

னர் அரசாங்கத்தின் முகமூடியைக் கிளிந்தெறியப் போவதாகவும் சூளுரைத்தார்.

1989, 90, 91 ஆண்டுகளில் செய்யப்பட்ட 40,000 மேற்பட்ட இலங்கை பிரஜைகளை படுகொலை செய்தது கறுப்புப்

## வாய்க்கால் திருத்தம்

முருங்கன்செம் மண்தீவில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் கட்டுக்கரையின் கீழ் அமைந்துள்ள சுமார் 10 இற்கு மேற்பட்ட வாய்க்கால்கள் துப்புரவாக்கும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## விசாரணை ஒத்திவைப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைகள் இம்மாதம் இருபத்தொன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகச் சென்னையிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.


பல் வைத்திய நிலையமும் வைத்திய ஆலோசனைகளும்

Dental Surgery &
Channelled Consultation Centre

மக்கள்சேவை அறிந்து சேவை புரியும்
ஒரே நிலையம் யாழ்நகரில்
ஆஸ்பத்திரி முன்பாக

பல் வைத்திய நிலையமும்,
வைத்திய ஆலோசனைகளும்

காது, மூக்கு, தொண்டை, தோல் வியாதிகள், கருப்பைக் கோளாறு, மகப்பேறு காணும் தாய்மார்களுக்கான விசேட சேவைகள், இவற்றுக்கான ஆலோ

உசன், மிருசுவில் (2834)

திருமதி தயாவதி பாலசிங்கமும் பிள்ளைகளும்

# மரண அறிவித்தல்கள்

## கந்தன் கணபதி

நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்டவரும், அக்கரையானை வதிவிடமாகவும் கொண்டவரும், இரணைதீவு அரசினர் வைத்தியசாலை தொழிலாளியாக கடமை புரியும், கந்தன் சின்னப்பிள்ளையின் அன்பு மகன் கந்தன் கணபதி 13-07-92 அன்று அகாலமரணமானார். இவர் மணியின் அன்புக்கணவரும், சந்திரா, ரமணி, தயா, உதயா, ஆகியோரின், அன்புத் தந்தையும், ராசன், அப்பன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யசிந்தன், கஜிந்தன், நிருபன், சுகந்தன், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். என்பதை அறியத் தருகின்றோம்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

அக்கரையான் குளம், அக்கரையான். (2841)

குடும்பத்தினர்

## செல்வரட்ணம் சுதர்ஷன்

செல்வன் சுதர்ஷன் இந்தியாவில் 11 - 07 - 92 அன்று சனிக்கிழமை அகால மரணமானார் இவர் யாழ்ப்பாணம் சம்பந்தன் மெடிக்கல் கிளினிக் உரிமையாளரான காலஞ்சென்ற டாக்டர் செல்வரெட்ணம், திருமதி பரமேஸ்வரி செல்வரட்ணம் அவர்களின் ஏக புதல்வனும், சுகன்யாவின் அன்புத்தம்பியும், முன்னாள் சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் யாவும் கோயம்புத்தூரில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இக்காரணத்தினால் எதிர்வரும் திங்கட்கிழமை 20 - 07 - 92 அன்று சம்பந்தன் மெடிக்கல் கிளினிக் மூடப்பட்டிருக்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

5/3, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம். [2843]

தகவல்:-

குடும்பத்தினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஐ. நா. அறிமுகப்படுத்தும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டில் இருந்து நாடுதிரும்பிய அகதிகளுக்கான சுயதொழில் முயற்சித் திட்டம் ஒன்றை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

நாடு திரும்பிய இந்த அகதிகளின் சுய பொருளாதாரத்தை விருத்திசெய்யும் முகமாகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணம் என்ற பெயரில் உலர் உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு இந்த மக்கள் நீண்டகாலம் வாழ்ந்து வருவதால் இவர்களது சுய பொருளாதார முயற்சிகள் குன்றிவிடும் அத்துடன் நாளடைவில் இந்த மக்கள் சோம்பேறிகளாக மாறிவிடுவர். இவ்வாறான நிலைமை உருவாகுவதைத் தடுப்பதற்காகவே மேற்படி முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அண்மையில் இந்தியாவில் இருந்து வருகைதந்த அகதிகள் மன்னார் மாவட்டத்தில் உள்ள தச்சனாமருதமடு என்ற பகுதியில் தங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மக்களுக்கு இவர்களது குடியிருப்புக்கு அண்மையில் குறிப்பிட்ட அளவு விவசாய நிலப்பரப்பு வழங்கப்பட்டு விவசாய முயற்சிக்கு வேண்டிய உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (க)

## தொடர்ந்தும் தடுத்து வைப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மக்கள் வங்கி நகைகள் இராணுவ முகாமில் மாயமாகப் போனமை தொடர்பாக கைது செய்யப்பட்ட பன்னிரண்டு இராணுவத்தினரில் மூவர் பிணையில் விடுவிக்கப் பட்டிருப்பதாகவும் ஏனையோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. முல்லைத்தீவு மக்கள் வங்கியினால் ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளும், பெருமளவு ரொக்கப் பணமும் இராணுவ முகாமில் பாதுகாப்பிற்காக கொண்டுசெல்லப்பட்டு வைக்கப்பட்ட பின்னர் காணாமல் போனமை தெரிந்ததே.

## மருந்தேற்றும்

சிகிச்சை பெறும் நோயாளர்களில் நூற்றுக்கு எழுபது சதவிகித நோயாளிகள் தொற்று நோய்க்கு இலக்காகுவதாக தெரிவித்தார்.

## வர்த்தகர்

தாராளமாகவும் கிடைக்கச் செய்வது வர்த்தகர்களின் தேசிய கடமையாகும். இக்கட்டான நிலைகளில் மக்களுக்கு அத்தியாவசியமான பணிகளை ஆற்றுபவர்கள் வரலாற்றில் மக்களால் நிச்சயம் மதிக்கப்படுவர்'' என்று தெரிவித்தார்.

தமது தேசிய கடமைகளை உணர்ந்து பொருள்களை மக்களுக்கு நியாய விலையில் விறபனை செய்துவரும் வர்த்தகர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

## சோதிடம்

விடும் என்று சோதிடம் கூறப்படுவதாக ஒரு துண்டுப்பிரசுரத்தில் உள்ளதே? சோதிடத்தின்படிதானா இராணுவம் செயல்ப்படுதுறது?

கேர்ணல் :- இதுபற்றி எனக்குத் தெரியாது எனத் தெரிவித்தார்.

## வடக்கிலும்

பரீட்சை நிலையங்கள் உட்பட அனைத்து நிலையங்களிலும் பரீட்சை திட்டமிட்டபடி நடத்தப்படுமென பரீட்சை ஆணையாளர் ஆர்தர்வெதமுல்ல கூறியுள்ளார்.

பட்ட இலங்கை பிரஜைளை படுகொலை செய்தது கறுப்புப் பூனைகள் என்றும் இவர்களுக்கு அரசு விஷேட படியாக 3000 ரூபாவும் ஏனைய சலுகைகளையும் உபகாரமும் வழங்கியது. இவர்கள் பாவித்த இலக்கத்தகடு அற்ற வாகனங்கள் அரச வாகனங்கள் என்றும் கூறினார்.

இவர்கள் நடமாட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கியஅமைச்சர்கள் அறிவார்கள் என்றும்கறுப்புப் பூனைகள் தான் ஐ. தே. கட்சியில் நிர்மாணிகள் என்றும்கூறினார்.

## பிரேமா

அக்கட்சியின் தலைவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்தியப்படை இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் புலிகளுக்கு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் வழங்கியதால் ஜனாதிபதி சிறிலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டத்தையும், தமது விசுவாசப்பிரமாணத்தையும் அவமதித்துவிட்டார். அத்தோடு சொந்த விளம்பரத்துக்காகப் பெருந்தொகையானபணத்தை விரையம்செய்கிறார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வன்மையாகக்கண்டனம் தெரிவித்துள்ளது.

கத்தலாம என்ற இடத்தில் ஐந்து நட்சத்திர உல்லாசப் பயணிகள் ஹோட்டல்ஒன்றை நடாத்த ஜனாதிபதி அனுமதி வழங்கியிருப்பது குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ. தே. கட்சி

தோருக்கு 25,000 ரூபா வங்கியில் வைப்பிலிடவுள்ளதாகவும், இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 3500 வெற்றிடம்

போட்டிப் பரீட்சை செப்டம்பர் மாதத்தில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கருப்பைக் கோளாறு, மகப்பேறு காணும் தாய்மார்களுக்கான விசேட சேவைகள், இவற்றுக்கான ஆலோசனையுடன் உடனடி சிகிச்சை அங்கும் இங்கும் அலையாது உங்கள் வைத்திய நிபுணர்கள் உங்கள் நோய்தீர ஆலோசனையுடன், உடனடி சிகிச்சையும் வழங்குகின்றார்கள்.

பல் வைத்திய நிலையமும் வைத்திய ஆலோசனைகளும்

பல் வியாதியால் அவதியுறும் உங்களுக்கு இதோ ஓர் நற்செய்தி !

உங்கள் பற்களில் ஏற்படும் வியாதிகளை, விசேட பல் வைத்திய நிபுணர்களைக்கொண்டு பார்வையிடவும், பல் கழற்றுதல், பல் அடைத்தல், அத்துடன் வைத்திய நிபுணர்களின் நேரடிக்கவனிப்பில், குறைந்த நாள் தவணையில் பல் கட்டிக்கொள்ள இதோ முகவரி:-

பல் வைத்திய நிலையமும்,
வைத்திய ஆலோசனைகளும்,
இல. 484, ஆஸ்பத்திரி வீதி.
(ஆஸ்பத்திரி முன்பாக, [மேல்மாடி],
யாழ்ப்பாணம்.

விளம்பர ஆக்கம்: ஷண் அட்வடைசிங் சேவிஸஸ், யாழ்நகர்.

(சி-4713)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**18. 07. 1992**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4929

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

26-4058, 24-6699, 28-2995, 24-5137, 26-6320, 26-8052, 41-8823, 24-7375, 24-8484, 24-6535, 26-6775, 28-1111, 42-1019, 25-3033, 23-0063, 23-9992, 25-7792, 25-6900, 25-8484, 25-1025, 37-3965, 25-6360.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்;

24-3906, 28-1636, 28-732, 24-7525, 26-1019, 26-2786, 26-4990, 26-656, 42-6157, 26-5071, 27-2084.